கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், ஆம்பூர்.

வாக்குமூலம் நாள்: 16.072026

வழக்கு எண்: டி.வி சி. 7/2025

வழக்கு சாட்சி: ம.சா.1

| | |
|---|---|
| பெயர்: குத்பூதின் | ஜாதி : - |
| /தந்தை/ பெயர் : ஜெய்னுல் ஆபீதீன் | தொழில் : – |
| கிராமம்: பேர்ணாம்பட்டு | |
| தாலுக்கா : பேர்ணாம்பட்டு | வயது : 88 |

குறுக்கு விசாரணை

மனுதாரர் எனக்கு என்ன உறவு என்றால் மகள் வழி பேத்தி ஆவார். என் மகள் அவரது குடும்பத்துடன் திருமணத்திற்கு பின்பு என் விட்டில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். என் மருமகனுக்கு தனியாக சொத்து உள்ளதா என்றால் பம்பாயில் உள்ளது. என் பேத்திக்கு நான் திருமணம் செய்து வைத்தோம் என்றால் நான் மற்றும் அவரது பெற்றோர் சேர்ந்து தா'ன் நடத்தி வைத்தோம். நாங்கள் 70 சவரன் நகை போட்டதற்கு ஆவணம் என்றால் உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் 20 சவரன் நகை போட்டார் என்றால் சரிதான். இரு தரப்பிலும் நகை குறித்து திருமணத்தின் பதிவின் போது குறிபிடும் வழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எங்களுக்கு 70 சரவன் போட வசதி இல்லை என்றால் சரியல்ல. எதிரி மனுதாரர் தரப்பில் தான் நகை போட்டு திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிமனுதாரருக்கு2 சவரன் நகை மற்றும் ரூ.100,000/ போட்டதற்கு ஆதராம் உள்ளதா என்றால் இல்லை திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் வர்த்தகம் செயது வந்தார். என்ன வேலை என்று தெரியாது. தோல் வியாபாரம் செய்வதாக கூறினார் .எதிர்மனுதுாரருக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரரின் நகையை எதிர்மனுதாரர் விற்க வில்லை என்றாலும் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நிலம் என் பேத்தியின் பெயரில் வாங்கினார் என்றால் ஒரு சொத்து தான் வாங்கினார். மற்ற சொத்துகளை அவரின் பெரியல் வாங்கினார். என் பேத்தி கடைசியாக 2 வருடத்திற்கு முன்பு வந்துவிட்டார். அதற்கு முன்பு எதிர்மனுதாரர் வீட்டில் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். அடிக்கடி சித்தரவதை செய்ததால் சென்று வருவதாக இருந்தார். இது குறித்து புகார் அளித்தோமா என்றால் புகார் அளித்தோம். எதிர்மனுதாரர் எத்தனை முறை வங்கி மூலமாக பணம் அளித்தார் என்றால் அளிக்கவில்லை. எதிர்மனுதாரர் ரூ. 1,60,000/- எனக்கு வசதி இல்லை என்பதால் அளித்தார் என்றால் சரியல்ல. என் பேத்தி மனநிலை பாதிக்கப்பட்டதால் சிகிச்சை

எடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தரப்பில் போட்ட நகையை நான் 15 சவரன் விற்பனை செய்தேன் என்றால் சரியல்ல. நான் என் பேத்திக்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் நகை பணம் அளிக்கவில்லை என்றாலும் எதிர்மனுதாரர் கொடுமை செய்யவில்லை என்றாலும் மனுதாரர் மனநிலை சரியில்லை என்பதால் வீட்டை விட்டு சென்று விட்டார் என்றால் சரியல்ல.